[8th August 1960

Medium of instruction in the Universities

9–00 a.m. *22 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the attention of the Government has been drawn to a statement by Dr. Subbarayan, Union Minister for Communications, that "most of the State Governments including the Madras Government seem to be in an undue haste in introducing the regional language as a medium for University Education. They forget that it will make standards go down if this policy is followed"?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government are aware of the statement, Sir.

SRI A. A. RASHEED : May I know whether the Government have given any consideration to the statement of the Union Minister and if so, what action the Government have taken in the matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : We have already considered every aspect of the matter and taken the decision. No new facts have been brought out.

Rural hospitals

*23 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா ?

(அ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரை ஜில்லாவில் எத்தனை ரூரல் ஆஸ்பத்திரிகள் திறக்கத் திட்டமிடப் பட்டது ?

(ஆ) அவைகளில் எத்தனை எங்கெங்கு திறக்கப்பட்டன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) There is no scheme in the Second Five-Year Plan which provides for the opening of rural dispensaries.

SRI N. R. THIAGARAJAN : மதுரை ஜில்லாவிற்கு என்று வெளியிட்ட இரண்டாவது ஐந்தாண்டு திட்டப் புத்தகத்தில் இருபத்தி ஐந்து ரூரல் டிஸ்பென்ஸரீஸ் திறக்கப் போவதாக அச்சிடப்பட்டிருக்கிறது. போதாக்குறைக்கு ஒரு படமும் அச்சிடப்பட்டு இன்ன தொகுதிகளில் என்றெல்லாம் போட்டு இன்னயிடத்தில் ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள், இன்ன இடத்தில் ரூரல் டிஸ்பன்ஸரீஸ் என்றெல்லாம் இருக்கிறது. ஆனால் அதில் ஒன்றுகூட நடைபெறவில்லையே, காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : படத்தை அவ்வளவு தூரத்திலிருந்து கண்டு பிடிக்க முடியாது. ரூரல் டிஸ்பன்ஸரீஸ்-யை லோக்கல் போர்ட்தான் திறக்கிறது. அதில் இரண்டு விதம் இருக்கிறது, சப்ஸிடைஸ்ட் அன்ட் நான்-ஸப்ஸிடைஸ்ட் என்று. சப்ஸிடைஸ்ட்-ஐ திறக்க சர்க்கார் அங்கிகாரம் வேண்டும். கவர்ன்மென்ட் சப்ஸிடி இல்லாததற்கு லோகல் போர்டே திறக்கவேண்டும். ஆகவே இதுபற்றி தகவல் இல்லை.

8th August 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM : ப்ரைமரி ஹெல்த் சென்டர்ஸ் வேறு. அது, திட்டம் போட்ட பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ரூரல் டிஸ்பன்ஸரீஸ், அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் இரண்டு விதத்தில் இருக்கின்றன. சர்க்கார் உதவி இல்லாமலேயே ஆங்காங்கிருக்கக்கூடிய ஜில்லா போர்ட்கள் அவைகளைத் திறக்க முடியும்.

SRI N. R. THIAGARAJAN : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நடைபெறக்கூடியது என்று அச்சிடப்பட்ட புத்தகத்தில் போடப்பட்டிருக்கிறது. ப்ரைமரி ஹெல்த் சென்டர், தேனீ என்ற பெயரால் படத்தில் இருக்கிறது. அதுகூட திறக்கப் படவில்லை. மார்ச் 31 வரப் போகிறது. அதைக் கவனிப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக் கேள்வி ரூரல் டிஸ்பன்ஸரீஸ்-யைப் பற்றியது.

SRI A. A. RASHEED : May I know whether all these rural dispensaries have doctors and if not, how many of them have got doctors?

THE HON. SRI M. A. MANICKAVELU : I cannot give information now. But most of the rural dispensaries have got doctors. Probably one or two dispensaries may not have them.

SRI M. K. SOMASUNDARAM : ஜில்லா போர்டிற்கு ஏற்கனவே பணமில்லை. அவர்கள் எப்படி ஆஸ்பத்திரிகளைத் திறக்க முடியும்? திறக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளிலேயே மருந்து வாங்கிக் கொடுக்க முடியாத நிலை இருக்கும்போது ஜில்லா போர்ட் ஆஸ்பத்திரிகளை கவர்ன்மெண்ட் திறக்க முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்பொழுதுள்ள சூழ்நிலையில் கவர்ன்மெண்ட் திறக்கிறது, ப்ரைமரி ஹெல்த் சென்டேர்ஸ். ரூரல் டிஸ்பன்ஸரீஸ் ஜில்லாபோர்ட் செய்ய வேண்டியது.

Shark liver oil

* 24 *Q.*—SRI A. VEDARATHNAM :
SRI P. G. MANICKAM : } கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) இம் மாநிலத்தில் மீன் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை இருக்கிறதா? எங்கே இருக்கிறது? எவ்வளவு எண்ணெய் உற்பத்தி செய்து வருகிறது?

(ஆ) இல்லையானால், அத் தொழிற்சாலையை இம் மாநிலத்தில் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(இ) அப்படியானால், எங்கே, எப்பொழுது?

TRUTH ALONE TRIUMPHS